**பொல்கஹவெல பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

-------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொல்கஹவெல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணங்களுக்காக நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அபிவிருத்தி நடவடிக்கையொன்றின் காரணமாக பொல்கஹவெல சிறுவர் பூங்காவிலிருந்து ரூபா. 3,407,814 பெறுமதியான உபகரணங்கள் தற்காலிகமாக அகற்றப்பட்டு மீண்டும் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் நிலையான சொத்துக்களின் கணக்கிலிருந்து மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கான வருமான பங்களிப்புக் கணக்கிலிருந்தும் அவ்வுபகரணங்களின் பெறுமதி நீக்கப்பட்டிருந்தது.

(இ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் அடிப்படையில் ரூபா. 431,666 ஆன 06 வாராந்த சந்தைக் கட்டிடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இயந்திரம் மற்றும் இயந்திர உபகரண பதிவேட்டின் அடிப்படையில் ரூபா. 485,000 பெறுமதியான உழவு இயந்திரமொன்று ரூபா. 99,000 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது

(உ) வைப்பு பதிவேட்டின் பிரகாரம் ரூபா. 832,771 ஆன குறைந்த கேள்விகள் வைப்பு பெறுமதி ரூபா 616,158 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய நிர்மாண நிர்மாண வைப்பு ரூபா. 285,472 என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா. 105,757 இனால் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

11 கணக்குப் விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் பதிவேடுகள் அடிப்படையிலான மீதிகளுக்கிடையில் ரூபா. 29,380,770 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 61,068,747 ஆன பெற வேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா. 6,892,060 ற்கான காலப் பகுப்பாய்வு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(i) 2017 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு ரூபா. 77,797,683 ஆன செலுத்த வேண்டிய மீதிக்கான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 01 ஆண்டு முதல் 19 ஆண்டுகள் வரை நிலவும் ரூபா. 24,105,803 ஆன மீதி செலுத்தப்படப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

தேவையான தகவல்கள் முன் வைக்கப்படாததனால் மொத்தம் ரூபா. 5,644,264 ஆன 13 கணக்குப் விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் போனது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) **1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள்** | | |
| (i) விதி 59 | - | சபை அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடுகளை நடாத்தி கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | (ii) விதி 214 | - | சபைக்குச் சொந்தமான சகல ஆதனங்கள் மற்றம் பொருட்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) விதி 217 மற்றும் 218 | | 4 பிரிவுகள் உள்ள கட்டிடங்கள் மற்றும் அவை அமைந்துள்ள பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாதிருந்ததுடன் காணி தொடர்பான பரிசோதனையொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவெம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | 1,571,579 | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென் பொருள் என்பன தொடர்பாக வேறாக நிலையான வைப்புப் பதிவேடொன்று பராமரிக்கப்படவில்லை. |
| (ஈ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1597'8 ஆம் இலக்க அதிவிசேட வர்ரத்தமானி பத்திரம் | 1,840,000 | சபை அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள 08 தொலைபேசி கோபுரங்களிலிருந்து செய்முறைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

**1.3.6 போதியளவு அதிகாரத்தினால் உறுதி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்**

சபைக்கு சொந்தமான இரண்டு காணிகளின் ரூபா. 2,203,363 பெறுமதியானது அதிகாரமின்றி நிதிக்கூற்றுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 220,059 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 11,044,465 ஆக காணப்பட்டது

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) வீதவரியும் வரியும் குத்துகையும் | 11,096 | 11,264 | 8,165 | 7,436 | 9,841 | 10,158 | 8,164 | 7,482 |
| (ii) வாடகை | 9,090 | 8,874 | 8,735 | 3,526 | 6,113 | 7,162 | 6,814 | 2,477 |
| (iii)அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,626 | 481 | 480 | - | 449 | 505 | 311 | - |
| (iv) ஏனைய வருமானம் | 121,460 | 94,135 | 94,132 | 15,962 | 116,993 | 95,518 | 95,516 | 33,564 |
| மொத்தம் | 144,272 | 114,754 | 111,512 | 26,924 | 133,396 | 113,343 | 110,805 | 43,523 |

**குறிப்பு**

- மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் முன்னைய ஆண்டுகளிற்குரிய நிலுவை வருமானத்தில் சேகரிக்கப்பட்ட ரூபா. 6,281,142 அறவீடு உள்ளடக்கப்பட்டிருந்தது.

- வருமான நிர்வாகம் தொடர்பாக சபையினால் சமர்ப்பிக்கப்படும் பெறுமதிகள் மற்றும் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருக்கும் பெறுமதிகளுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்பட்டன.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா. 114 மில்லியனாக இருந்ததோடு, சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா. 111 மில்லியனாக காணப்பட்டது. அதனுள் முன்னைய ஆண்டிற்காக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா. 6 மில்லியன் ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிலுவையாக இருந்த ரூபா. 43 மில்லியன் வருமானம் மீளாய்வாண்டில் ரூபா. 26 மில்லியன் வரையில் குறைந்திருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

பின்வரும் அம்சங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 7,436,958 ஆக இருந்த நிலுவை வரி தொடர்பாக காலப் பகுப்பாய்வொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 32 இன் பிரகாரம் வீதவரி வரி பதிவேடு நாளதுவகையாக பேணப்படவில்லை.

### 2.2.4 வாடகை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய கடை வாடகை மற்றும் கேள்வி வாடகை முறையாக ரூபா. 1,466,109 மற்றும் ரூபா. 2,045,832 ஆக காணப்பட்டது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையாக ரூபா. 708,375 மற்றும் ரூபா. 2,500,000 ஆக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் பிரகாரம் 30 விடயங்களை அடையும் நோக்கில் உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆம் திகதியாகிய போதும், அவ் விடயங்களிற்காக சபையினால் உப விதிகள் பிறப்பிக்கப்படாதிருந்ததோடு, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிறப்பிக்கப்பட்டிருந்த உப விதிகள் சபையினால் பின்பற்றப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(ஆ) நிறைவேற்றப்படாத இலக்குகள்**

மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா. 640,000 பெறுமதியான 04 நிர்மாணங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

உக்கலடையும் கழிவை பயன்படுத்தி பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்ததோடு, உக்கலடையாத கழிவிலிருந்து வேறுபடுத்தப்படும் தொகையொன்று ஹொல்ஸிம் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. எஞ்சிய கழிவுகள் கொம்போஸ்ட் முற்றத்தில் புதைக்கப்பட்டிருந்தது.

**(ஈ) சுற்றாடல் சிக்கல்கள்**

சபை அதிகாரப் பிரதேசத்தின் வழியாக செல்லும் புகையிரத பாதையில், புகையிரத தொகுதிகள் மற்றும் புகையிரத நிலையங்களில் பிளாஸ்டிக் போத்தல், கோப்பைகள், பொலிதீன் உறைகள் உள்ளங்கிய கழிவுகளை அகற்றுவது ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030’’ தொடர்பான பயிற்சித் திட்டங்கள் மற்றும் பொது ஊடகங்கள் மூலம் சபை அறிந்திருந்தது. வறுமையை ஒழிக்கும் நிகழ்ச்சியின் கீழ் கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சிகள், கைத்தொழிலில் ஈடுபடும் குடும்பங்களுக்கு உதவி மற்றும் உபகரணங்களை வழங்குதல், மகளிர் தொழில் முயற்சியாளர்கள் அறிவுறுத்துதல், வீடமைப்பு உதவி வழங்குதல், குறைந்த வருமானத்தை ஈட்டும் குடும்பங்களில் குழந்தைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குதல் மற்றும் எண்ணங்களை வழுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகார் பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள தொலைதொடர்பு கோபுரம் தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்பட்டு வருடாந்தம் சபைக்கு வருமானமொன்றைப் பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) ரூபா. 1,101,616 ஆன 34 ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய வைப்புகள் 34 நலனாலிகளுக்கு இடையே பங்கிடப்படாமல் இருந்ததுடன் அவற்றுள் ரூபா. 401,875 ஆனது 01 முதல் 18 வருடக் காலப்பகுதிக்குள் நிலவும் மீதிகள் ஆகும்.

(இ) பிரதேச சபை காணி, தொழில் பயிற்சி நிலைய கட்டிடம், முன்பள்ளி கட்டிடம், உத்தியோகபுர்வ இல்லம் மற்றும் கராஜ் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) பதவி வெற்றிடங்களும் பணி மிகைகளும்

அனுமதிக்கப்பட்ட பதவியணியினருள் மூன்றாம் மட்டத்தில் 02 வெற்றிடங்களும் இரண்டாம் மட்டத்தில் 10 வெற்றிடங்களும் காணப்பட்டன.

### (ஆ) ஊழியர் கடன்

சேவையிலிருந்து விலகிச் சென்ற இருவரிடமிருந்து ரூபா. 98,228 ஆன தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்யாதிருத்தல்

(i) கொடவெல, படகொல்ல காணியில் 1994 ஆம் ஆண்டில் சபைக்கு கிடைத்த 01 ரூட் 37.7 பேர்ச் பொதுக் காணி விற்பனை செய்யப்பட்டது சபையினால் கண்டறியப்பட்டிருந்த போதும் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) கழிவுப் பொருள் நிலைய காணி மேவுகை செய்யும் விதமாக அனுமதியின்றி சில வீடுகள் கட்டப்பட்டு மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளதுடன், அந்த அத்துமீரிய குடியிருப்பாளர்களை அகற்ற சபை உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

சபை உபயோகிக்கும் 08 காணிகளுக்கான உரிமை சபை கையேற்காமல் இருந்ததுடன் அக் காணித் துண்டுகளின் அளவு தொடர்பான விபரங்கள் சபையிடம் இருக்கவில்லை.

### 3.4.3 விளைவற்ற மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 04 அச்சுக் கல் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் மற்றும் மரத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் 2015 ஆம் ஆண்டிலிருந்து செயலற்றுக் காணப்படுவதுடன் அவற்றின் பெறுமதி முறையே ரூபா. 1,397,152 மற்றும் ரூபா. 16,810 ஆகும்

(ஆ) விசாகா முன் பள்ளி அருகில் நிறுவப்பட்டுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு கொடுக்கப்படும் பதவிநிலை மட்டத்தில் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் கராஜ் என்பன 11 ஆண்டுகளாக செயலற்றுக் காணப்படுகின்றது.

## 3.5 பெறுகை

### 3.5.1 ஒப்பந்த நிர்வாகம்

ரூபா. 1,742,294 என்ற மதிப்பீட்டின் மீது நிர்மாணித்து முடிக்கப்பட்ட பிதுருவெல்ல ஸ்ரீ சுதர்மாராம விகாரையின் நுழைவாயிலில் அச்சுக் கற்கள் பிடிக்கப்பட்டதை பௌதீக ரீதியாக பரீட்சித்த போது போது வீதியின் 34 இடங்களில் வெவ்வேறான அளவுகளில் கீழ் இறங்கி காணப்பட்டதுடன் ஒரு இடத்தில் 17 x 0.4 மீட்டர் அளவில் கீழ் இறங்கி காணப்பட்டது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதிடப்படாத 14 நிர்மாணங்களை நிறைவேற்ற ரூபா. 4,781,455 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமை | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | கணக்காய்வு | கணக்குப் புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் நாளதுவரையாக பேணப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) ஆவணங்கள் கையாளப்படாமை.<br>(ii) பாதுகாப்பு உறுதி செய்யப்படாமை.<br>(iii) விளைவற்ற மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்கள் காணப்பட்டமை. |
| (இ) | கடன்பட்டோர் / கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) அட்டவணை தயாரிக்கப்படாமை.<br>(ii) காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாமை |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் | (i) போதியளவில் மேற்பார்வையொன்று காணப்படமை.<br>(ii) உரிய தரத்தில் நிர்மாணப் பணிகள் நடைபெறாமை. |